**DEPOSITION OF WITNESS**

**IN THE COURT OF DISTRICT MUNSIF-CUM-JUDICIAL MAGISTRATE, KODUMUDI.**
**Calendar Case No. 209/2025**
**Prosecution Witness**:6

| | | | |
|---|---|---|---|
| Name | முருகேசன் (PW6) | Taluk | |
| Father's Name | | Calling | |
| Village | | **Age** | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **day of April 2026** by S.Ponraj Junior Assistant DM Cum JM Court, Kodumudi by following the direction of Officer of this Court.

***Accused produced through Video Conference. Accused Counsel present.)***

**முதல் விசாரணை(அரசு தரப்பு):—**

நான் தற்போது சிவகிரி காவல்நிலையத்தில் காவல் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 06.05.2025ம் தேதி 10.00 மணி சுமாருக்கு நான் சிவகிரி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக நிலைய பொறுப்பில் இருந்தபோது ஜெகதீசன் வயது 60, த/பெ.பொங்கியப்பன், எண்.61 தொப்பபாளையம், அம்மன்கோவில் அஞ்சல், சிவகிரியை சேர்ந்தவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்துமூலமான புகாரை பெற்று சிவகிரி காவல்நிலைய குற்ற எண்.131/2025 ச/பி.331(4), 62 BNSS படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது**. அசல் முதல் தகவல் அறிக்கையை வாதியின் புகாருடன் இணைத்து சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். இதர நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பிவைத்தேன்.

2. வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு 06.05.2025ம் தேதி காலை 11.30 மணிக்கு இவ்வழக்கின் சம்பவ இடமான தொப்பபாளையம், வாதி ஜெகதீசன் வீட்டிற்கு சென்று சாட்சிகள் நந்து மற்றும் சோமசுந்தரம் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வைமகஜர், மாதிரி வரைபடம் தயார் செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். **பார்வைமகஜர் அ.சா.ஆ.5ஆக குறியீடு செய்யப்படுகிறது. மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** சாட்சிகள் ஜெகதீசன், திலகா, ஜெகதாம்பாள், நந்து, சோமசுந்தரம் ஆகியோர்களை

தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நான் இந்த வழக்கை புலன் விசாரணை மேற்கொண்டதில் வழக்கு சம்பவம் உண்மை என தெரியவந்து எதிரியை தேடி வந்த நிலையில் ஈரோடு தெற்கு காவல்நிலைய குற்ற எண்.70/2025 ச/பி.331(4), 305(a) BNS வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியான கடலூர் மாவட்டம், கள்ளக்குறிச்சி தாலுக்கா, விருகாவூரை சேர்ந்த சன்னியாசி மகன் இருசன் என்பவரை ஈரோடு தெற்கு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் தினேஷ்குமார் என்பவர் கைது செய்து விசாரிக்கவே மேற்படி இருசன் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை சாட்சிகள் கௌதம், சங்கர் ஆகியோர்கள் முன்னிலையில் பதிவு செய்துள்ளார். மேற்படி ஒப்புதல் வாக்குமூலத்தின் படி எதிரி இருசன் சிவகிரி காவல்நிலைய குற்ற எண்.131/2025 வழக்கில் சம்பந்தப்பட்டுள்ளார் என்று தெரிய வரவே நான் மேற்படி எதிரி இருசனை 26.08.2025ம் தேதி கடலூர் மத்திய சிறையில் வைத்து சம்பிரதாய கைது செய்து பின் 07.10.2025ம் தேதி PT Warrant மூலம் சமூகம் நீதிமன்றத்தில் ஆஜர் செய்து மேற்படி எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைத்தேன்.

3. 28.08.2025ம் தேதி இவ்வழக்கின் வாதி ஜெகதீசன் என்பவரை விசாரித்து மறுவாக்குமூலம் பதிவு செய்தேன். 06.10.2025ம் தேதி இவ்வழக்கின் எதிரி இருசன் அளித்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்த ஈரோடு தெற்கு காவல்நிலைய சார்பு ஆய்வாளர் தினேஷ்குமார் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து ஒப்புதல் வாக்குமூல நகல் பெற்றேன். 08.10.2025ம் தேதி வழக்கை புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு இவ்வழக்கின் எதிரி அளித்த ஒப்புதல் வாக்குமூலம்த்தில் சாட்சி கையெப்பமிட்ட சாட்சிகள் சங்கர் மற்றும் கௌதம் ஆகியோர்களை தனித்தனியே விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 08.10.2025ம்தேதி இவ்வழக்கின் புலன் விசாரணை முடித்து ஆஜர் எதிரி இருசன் மீது ச/பி.331(4), 62 BNS படி இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை (எதிரி தரப்பு) :-**

நான் இந்த வழக்கின் எதிரியை எப்போது பார்த்தேன் என்றால் 26.08.2025 அன்று கடலூர் மத்திய சிறையில் வைத்து பார்த்தேன். எனக்கு ஈரோடு தெற்கு காவல்நிலையத்தில் இருந்து எப்போது எதிரி ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தாக

PANDIARAJAN Digitally signed by PANDIARAJAN Date: 2026.04.20 11:04:28 +0530

தெரியவந்தது என்றால் தேதி சரியாக ஞாபகம் இல்லை. தகவல் கிடைத்தபின்னிட்டு ஈரோடு தெற்கு காவல்நிலையத்திற்கு சென்று எதிரியை பார்த்தேன் என்றால் இல்லை. இந்த வழக்கில் எதிரியை சம்பவ இடத்திற்கு அழைத்து செல்ல ஏதேனும் நடவடிக்கை எடுத்தேனா என்றால் இல்லை. புகார் ஒரு நாள் காலதாமதாக கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். எதிரி கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் சம்பவம் எப்போது நடந்தது என்று குறிப்பிட்டு சொல்லியுள்ளாரா என்றால் இல்லை. பார்வைமகஜர் சாட்சிகள் அ.சா.1க்கு உறவினர்கள் என்றால் தெரியாது. நான் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் பார்வைமகஜர் மற்றும் மாதிரிவரைபடம் தயாரிக்கப்படவில்லை என்றாலும், அவை காவல்நிலையத்தில் வைத்து தயாரிக்கப்பட்டது என்றாலும் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல. புள்ளிவிவரகணக்கிற்காக போடப்பட்ட வழக்கிற்கு பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை:– இல்லை**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

PANDIARAJAN

Digitally signed by PANDIARAJAN
Date: 2026.04.20 11:04:33 +0530

மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், கொடுமுடி.